3. உரிமைப் பிரச்சினை.

பேரவைத் தலைவரின் தீர்ப்புக்கு மாறாக 22—8—1990 ஆம் நாளன்று ''பொன் மனம்'' நாளிதழில் வெளிவந்துள்ள செய்தி குறித்தும், இந்திய குடியரசுத் தலைவரிடம், பேரவைத் தலைவர் குறித்து, செல்வி ஜெயலலிதா புகார் கூறியது குறித்தும்.

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, Breach of privilege....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : என்ன ''Breach of privilege ?'' (குறுக்கீடு). சொல்லுங்கள்.

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, இந்த அவையினுடைய உரிமையையும் பெருமையையும் காக்கின்ற பெரும் பொறுப்பை நீங்கள் தங்கள் கடமையாகக் கருதி ஆற்றி வருகிறீர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அப்படியா ? (சிரிப்பு).

திரு. குமரி அனந்தன் : அது ஆளுங்கட்சியிலிருந்து வருகிறதைவிட எங்களிடமிருந்து வருவதும் உங்களுக்கு சேர்த்து துணை புரியும் என்ற காரணத்திற்காகச் சொல்கிறேன். ஆக, இங்கே இருக்கின்ற ஒவ்வொரு உறுப்பினருடைய பெருமையை மட்டுமல்லாது, தாங்களும் இந்த அவையினுடைய ஒரு பாகமாக அமைந்து அதற்குத் தலைமை ஏற்கின்ற பெரும் பொறுப்பில் இருக்கின்ற காரணத்தினாலே இந்த அவையினுடைய பெருமை, அவையினுடைய உரிமை எப்போதும் பாதுகாக்கப்பட வேண்டுமென்பதிலே எல்லோரும் இங்கே அக்கறையோடு இருக்கிறோம் என்பதிலே ஐயமில்லை. நீங்கள் உங்களுடைய ஆழ்ந்த ஞானத்தாலும், பட்டறிவாலும், படிப்பறிவாலும், விதிகளைத் தெரிந்துகொண்டு இருப்பதினாலும் இங்கே இடமாற்றத்தைச் செய்கின்றபோது பல்வேறு செய்திகளைக் கவனத்திலே கொண்டு எதிர்க்கட்சித் துணைத் தலைவராக இருந்த மாண்புமிகு திருநாவுக்கரசு அவர்களை அந்த இடத்திலிருந்து வேறு இடத்திற்கு அமர்த்தி, அந்தக் கட்சியினுடைய பொதுச் செயலாளரும், அந்தக் கட்சியின் சார்பிலே எதிர்க்கட்சித் தலைவராக இருக்கிற இராதா அவர்களும் கேட்டுக் கொண்டதற்கு இணங்க, துணைத்தலைவராக திரு. செங்கோட்டையன் அவர்களை ஏற்றுக் கொண்டு, ஏற்றுக்கொண்ட காரணத்தினாலே அவருக்குரிய இடத்தை நீங்கள் அளித்தீர்கள். எனவே அவர் முன் வரிசையிலே எதிர்க்கட்சியின் துணைத் தலைவராக இருக்கிறார். இது நீங்கள் அளித்த தீர்ப்பின் அடிப்படையில் ஏற்பட்ட ஒரு முடிவு. அதை இங்கே ஏற்று அவர்கள் மூன்று தினங்களாக இங்கே அமர்ந்திருக்கிறார்கள். அந்த நேரத்தில்....(குறுக்கீடு) அவர்களுக்கு இடம் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

1990 ஆகஸ்ட் 23]

10–35 மணி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் சொல்ல வருகிற செய்தியை மட்டும் சொன்னால் போதும். ஏனென்றால் அதற்காகத்தான் அவர்கள் இரண்டு பேரும் வெளியே போனார்கள்.

திரு. குமரி அனந்தன்; பேரவைத் தலைவர் அவர்களே, இது ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒன்று. துணைத் தலைவர் யார் என்று நீங்கள் ஏற்றுக்கொண்டீர்கள். எங்களுக்கு முக்கியம் நீங்கள் ஏற்றுக் கொண்டீர்களா என்பதுதான். அவ்வாறு நீங்கள் ஏற்றுக்கொண்டு, இருக்கையும் ஒதுக்கிவிட்ட பிறகு இப்போது 'பொன் மனம்' என்ற மாண்புமிகு திருநாவுக்கரசு அவர்கள் நடத்துகிற ஏட்டில் தன்னையே எதிர்க்கட்சித் துணைத் தலைவர் என்று 22-ம் தேதியிட்ட அந்த இதழில் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள் என் கையிலே அந்த நாளேடு இருக்கிறது. ஆக உங்களுடைய தீர்ப்பைமீறி உங்களுடைய அதிகாரத்தை மீறி தன்னை எதிர்க்கட்சித் துணைத் தலைவர் என்று அவர் எழுதினாரா? அல்லது பத்திரிகை வெளியிட்டதா என்பதை எல்லாம் நீங்கள் முடிவு செய்யவேண்டும். பொன்மனம் பத்திரிகையில் அவரை ஆசிரியராகக் கொண்ட பத்திரிகையில் எதிர்க்கட்சித் துணைத் தலைவர் என்று வந்திருப்பதால் இந்த அவையின் பெருமையும், உரிமையும், தங்கள் அதிகாரமும் மீறப்பட்டு இருக்கிற காரணத்தால் இதனை உரிமைக் குழுவுக்கு அனுப்பி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, அதிலே தாங்கள் என்ன தீர்ப்புக் கூறுவீர்களோ எனக்குத் தெரியாது. அதில் தலையிட எனக்கு உரிமை இல்லை. அதே நேரத்தில் தங்களைப் பற்றி இந்தியக் குடியரசுத் தலைவரிடத்தில் தாங்கள் யார் பேச்சையோ கேட்டுக்கொண்டு செயல்படுகிறீர்கள் என்று தங்களுடைய இறையாண்மை, தங்களுக்கு இந்த அவையிலே உள்ள அதிகாரம் இவைகளை எல்லாம் கேள்விக்குறியாக்குகின்ற வகையில் இந்த அவையிலே வராவிட்டாலும் கூட உறுப்பினர் என்ற முறையில் உள்ள ஒரு உறுப்பினர் செல்வி ஜெயலலிதா அவர்கள் குடியரசுத் தலைவரிடத்தில் தங்களைப் பற்றி ஒரு புகார் கொடுத்திருக்கிறார்கள். இது நம்முடைய நண்பர் இலக்கியச் செல்வர் திரு. குமரி அனந்தன் அவர்கள் சொன்னது உரிமைப் பிரச்சினை என்ற அடிப்படையில் வருமேயானால் தங்களையே இழிவு படுத்துகிற முறையில் தாங்கள் யார் பேச்சையோ கேட்டுக் கொண்டு ஆடுகிறீர்கள் என்ற வகையில் கொடுக்கப்பட்ட அந்தப் புகாரும் அந்த உரிமைப் பிரச்சினையின் கீழ் வரும் என்று கருதுகிறேன். எனவே, இதைத் தாங்கள் யோசிக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இரண்டையும் கவனித்து தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.